Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41 கதிர் : 110

திங்கட்கிழமை 16 மார்ச் 2026

பங்குனி 02 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

## வாள், ஐஸுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 16
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவன் முனியப்பர் கோயிலுக்கு அருகில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் வாள் என்பவற்றுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர் ஒருவரிடம் இருந்து வாள் ஒன்றும், ஏனைய இருவரில் ஒருவரிடம் இருந்து 2 கிராம் 340 மில்லி கிராம்ஐஸ்போதைப் பொருளும். »11

# இந்த ஆண்டுக்குள் மாகாணத்தேர்தல்!

### வெளிவிவகார அமைச்சர் உறுதி



கொழும்பு, மார்ச் 16
இந்த ஆண்டு இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். »11

## எரிபொருள் 'கியூ.ஆர்' முறைமை நேற்று மதியம்முதல் நடைமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 16
தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர (கியூ. ஆர்.) முறைமை நேற்று மதியம் முதல் நடைமுறைக்கு வந்தது. இனிமேல் எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும்கு(கியூ. ஆர்.) றியீடு இன்றி எரிபொருள்விநியோகிக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கியூ. ஆர். முறைமை நேற்றுக்காலை முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும், தொழில் நுட்பச் »11

## மீண்டும் வருகிறதா 'வீட்டிலிருந்து பணி'?

### ஜனாதிபதி தலைமையில் நேற்று தீவிர ஆலோசனை



கொழும்பு, மார்ச் 16
மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழலால் உருவாகும் நிலைமைகளை முன்கூட்டியே கணிக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, புதிய சவால்களைத் தொடர்ந்து கண்காணித்து கூட்டு முயற்சியுடன் முகம்கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.
தற்போதைய சூழ »11

### எரிபொருள் கியூ.ஆர். முறைமை

## திடீர் அறிவிப்பால் மக்கள் அல்லோலம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
நேற்றுமுன்தினம் இரவு தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர (கியூ. ஆர்.) முறைமை நடைமுறைப்படுத்தப்படும் என்ற அறிவிப்பு விடுக்கப்பட்டதை அடுத்து, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மக்கள் மீண்டும் முண்டியடித்தனர்.
எரிபொருள் கொள்வனவுக்கு கியூ. ஆர். முறைமை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், நேற்றுக்காலை முதல் இது நடைமுறைக்கு வரும் என்றும் நேற்றுமுன்தினம் இரவு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக நேற்று மதியமே இந்த முறைமை நடைமுறைக்கு வரும் என்று பின்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.
இந்தநிலையில் நேற்றுக் காலை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் எரிபொருளுக்காக மீண்டும் »11

## காக்கைதீவு குப்பை மேட்டில் நேற்று தீ!

யாழ்ப்பாணம், மார்ச் 16
காக்கைதீவில் உள்ள குப்பை மேடு நேற்று தீப்பற்றி எரிந்ததால் அந்தப் பகுதியில் உள்ள மக்களிடையே பதற்றம் ஏற்பட்டது.
நேற்று மதியம் திடீரெனப் பெரும்புகைமூட்டத்துடன் குப்பைகள் எரிந்தன. அதனால் அந்தப் பகுதியில் உள்ள 30 குடும்பங்க ளைச் சேர்ந்த சிறுவர்கள் , முதியோர்கள் உட்பட 130க்கும் மேற்பட்டவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். 'இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. அத்துடன் இரவு வேளைகளில் இந்தப் »11

## நெருக்கடிகளைத் தவிர்க்கவே மீண்டும் 'கியூ.ஆர்' முறைமை

### அமைச்சர் பிமல் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
பண்டிகைக் காலத்தில் எரிபொருள் நெருக்கடி ஏற்படலாம் என்பதைக் கருத்தில் கொண்டே 'கியூ. ஆர்' முறைமை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம், காரைநகர் சுற்றுவட்ட வீதியின் புனரமைப்புப் பணி »11


## சுற்றிவளைப்பு 681 பேர் கைது

விரிவு பக்கம்:-05

## பங்குனித் திங்கள் உற்சவம் ஆரம்பம்

### மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மனில்

சாவகச்சேரி, மார்ச் 16
வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய பங்குனி முதலாம் திங்கள் உற்சவம் இன்று பக்தி பூர்வமாக ஆரம்பமாகவுள்ளது.
ஐந்து திங்கள் நடைபெறவுள்ள உற்சவத்துக்கு பல இடங்களிலுமிருந்து பெரு »11



"அப்ப இனிமேல் பெற்றோல் நெருக்கடி எண்டதைச் சாட்டி லெக்சனைப் பின்னுக்குப் போடுவினம் கண்டியளோ"

முச்சந்தி முனி

## பொலிஸ் தலையீட்டுடன் எரிபொருள் விநியோகம்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
பொலிஸாரின் ஒத்துழைப்புடன் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக கியூ. ஆர். முறையின் கீழ் மட்டுமே இனிமேல் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.
கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி. ஜே. ராஜகருண நேற்றுப் பிற்பகல் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார். »11

## இலங்கை வருகின்றனர் ஐ.எம்.எப். பிரதிநிதிகள்!

கொழும்பு, மார்ச் 16
சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வர உத்தேசித்துள்ளது.
இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டத்தின் ஆறாவது தவணையை விடுவிக்க முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய 5ஆம் கட்ட மீளாய்வு நடவடிக்கைகளில் இந்தக் குழு ஈடுபடவுள்ளது என்று நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
இந்தக் குழு நாட்டின் பொருளாதார செயற்றிறன் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு அமைய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயவுள்ளது.
இந்த மீளாய்வைத் தொடர்ந்து ஆறாவது »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4376 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 01 16 24 46 |
| விசேட எழுத்து | I |

### ஹந்தஹன ராசி சுப பலன்

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1443 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 06 09 10 46 |

### NLB ஜய

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0402 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 2 2 6 2 |

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2482 |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கங்கள் | 50 55 64 78 |

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6134 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 6 8 0 9 9 2 |

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2164 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 29 41 58 81 |
| விசேட எழுத்து | Q |

### சுப தவசக்

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0250 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 15 21 |

# இறக்குமதிப் பொருள்களின் விலை அதிகரிக்கும் சாத்தியம்

கொழும்பு, மார்ச் 19

**இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலையில் அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்று வர்த்தக பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், உலகளாவிய ரீதியில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக பொருள்களின் விலை அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாதுள்ளது என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவதுஉலகெங்கிலும் எரிபொருள் போக்குவரத்து மற்றும் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடைகள் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தடையின்றிப் பொருள்களை விநியோகிப்பதற்காக இதுவரை பொருள்களை இறக்குமதி செய்த நாடுகளுக்கு மேலதிகமாக, ஏனைய நாடுகளிலிருந்தும் பொருள்களை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் ஆராய்கின்றது.

எரிபொருள் விலை மற்றும் எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சில குறைபாடுகள் காரணமாக விநியோக வலையமைப்பில் பாதிப்பு ஏற்படலாம். இதனால் பொருள்களை இறக்குமதி செய்யும்போது அவற்றின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. தற்போதைய அரசாங்கம் இது தொடர்பாக அதிக கவனம் செலுத்தி வருகிறது.

பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு குறைவாக இருக்கும் என நாம் நம்புகிறோம். அதேநேரம், எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளால் விலையில் ஓரளவு அதிகரிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது-என்றார். (அ-எ-இ)

### சுபிரி தன சம்பத

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0842 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 8 9 9 8 7 5 |

### Super Ball

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3108 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 18 26 39 41 |

### சனிதா

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 02 23 28 40 |
| வெற்றி வாரம் | 5269 |

### SASIRI

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0937 |
| வெற்றி இலக்கம் | 06 21 35 |

### லக்ன ராசி

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ராசி | மேஷம் |
| வெற்றி இலக்கம் | 19 23 31 54 |
| சீட்டிழுப்பு வாரம் | 4820 |

### KAPRUKA

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 30 |
| வெற்றி இலக்கம் | 30 40 41 71 |
| வெற்றி வாரம் | 2284 |

### அத கோடிபதி

| | |
|---|---|
| திகதி | 15.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 13 20 25 54 |
| வெற்றி வாரம் | 2934 |

## ஈரான்–இலங்கை அமைச்சர்கள் பேச்சு

கொழும்பு,மார்ச் 16

ஈரானில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய இராணுவ ஆக்கிரமிப்புக் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கும், ஈரானிய வெளிவிவகார அமைச்சர் சையத் அப்பாஸ் அரக்ச்சிக்கும் இடையில் தொலைபேசிக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகியன ஈரானுக்கு எதிராக மேற்கொண்ட இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவாக ஏற்பட்ட அண்மைய நிலைமைகள் தொடர்பில் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் இதன்போது வெளிப்படுத்தினார்.

இக்கட்டான சூழலில் இலங்கை அரசு வழங்கிய மனிதாபிமான உதவிகளுக்காக ஈரானிய அமைச்சர் தனது நன்றிகளையும் தெரிவித்தார் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## தலைமைத்துவ இடைவெளியை நிரப்புவதற்கு நாங்கள் தயார்!

*தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவிப்பு*

வவுனியா, மார்ச் 16

சுயநல அரசியலால் தமிழ்க்கட்சிகள் மக்கள் பணியில் தோல்வியடைந்துள்ள நிலையில், அந்தத் தலைமைத்துவ இடைவெளியைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிரப்பும் என அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் தேசிய ஒருங்கிணைப்பாளருமான சுதாகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய தமிழ்க்கட்சிகள் பொதுநலமின்றி சுயநலத்துடன் செயற்படுவதால் மக்கள் சரியான தலைமைத்துவமின்றித் தவிக்கின்றனர். 2009 போரின் பின்னரான நீண்ட காலப்பகுதியில் தமிழ்க்கட்சிகளுக்குப் போதிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

ஆனால், அவை மக்களின் விடுதலைக்கான பாதையைச் சரியாகத் தெரிவு செய்யவில்லை. கடந்த காலப் பின்னடைவுகளைத் தாண்டி, தற்போது இளைஞர்களின் பங்களிப்புடன் புதிய நிர்வாகத்தின் கீழ் கட்சி புத்துயிர் பெற்றுள்ளது.

தலைவர் ஆனந்தசங்கரியின் நீண்டகால அனுபவமும், புதியவர்களின் புத்திசாலித்தனமுமே எமது தேசத்துக்கு விடுதலையைப் பெற்றுத்தரும்- என்றார்.

அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 10 மணிக்கு வவுனியா, வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-110)

## 13– ஐ வழங்கியவர்கள் நாமே எதிர்த்தவர்களுக்கே ஆதரவு

ஐ.ம.சக்தி வருத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தைக் கொண்டுவரப் பாடுபட்ட எமது அணியை விடுத்து, அதனை எதிர்த்த ஜே.வி.பி.யைத் தமிழ் மக்கள் ஆதரித்தமை கவலையளிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது ஆட்சியில் உள்ள ஜே.வி.பி. என்கின்ற தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களிடம் பல பொய்யான வாக்குறுதிகளை வழங்கி நிறைவேற்றமுடியாமல் திண்டாடி வருகிறது.

வடக்கில் நிலங்களை விடுவிப்போம் அரசியற்கைதிகளை விடுவிப்போம். அதேபோல் தெற்கு மக்களுக்கும் வாக்குறுதிகளை அள்ளி வழங்கினார்கள். ஆனால் அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்குத் தொடர்ச்சியாக தமது ஆதரவை வழங்கிவந்தவர்கள் அதை நாம் மறக்கமாட்டோம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பிளவுக்கு காரணமான ஜே.வி.பி. என்கின்ற தற்போது தேசிய மக்கள் சக்தியாக ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களைத் தமிழ் மக்கள் இனியும் நம்பி ஏமாறவேண்டாம் - என்றார். (ச-20)

## அரச நிறுவன முறைகேடுகளை விசாரிக்க அதிகாரிகள் குழு!

கொழும்பு,மார்ச் 16

அரச நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள் குறித்து முதற்கட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்காக புதிய விசாரணை அதிகாரிகளின் குழுவொன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காகக் கோரப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து தகுதியான 150 அதிகாரிகள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டு இந்த விசேட குழுவில் இணைக்கப்படவுள்ளனர் என்று பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட இந்த 150 அதிகாரிகளும் தலா 50 பேர் கொண்ட மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, 14 நாள்கள் கொண்ட விசேட பயிற்சித் திட்டங்களுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இதன் மூலம் அரச நிறுவனங்களின் வெளிப்படைத் தன்மை மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தரமற்ற நிலக்கரி இறக்குமதி மக்கள் மீது மின்சாரச் சுமை

## சஜித் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 16**

**தற்போதைய அரசாங்கம் நுரைச்சோலை மின்நிலையத்துக்காகத் தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்வதால் நாட்டு மக்களும் மின்சார நுகர்வோரும் பெரும் பொருளாதார மற்றும் சுகாதாரப் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நுரைச்சோலை மின்நிலையத்தின் மூன்று இயந்திரங்களும் தலா 300 மெகாவோட் வீதம் மொத்தம் 900 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யவேண்டும். உள்ளக பயன்பாட்டுக்குப் போக 810 மெகாவோட் தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கப்படவேண்டும். ஆனால், நேற்றுமுன்தின நிலைவரப்படி 680 மெகாவோட் மின்சாரம் மாத்திரமே உற்பத்தியாகியுள்ளது.

காணாமற்போயுள்ள 130 மெகாவோட் மின்சாரத் தட்டுப்பாட்டுக்கு தரமற்ற நிலக்கரிப் பயன்பாடே நேரடிக் காரணமாகும். தரமற்ற நிலக்கரியால் போதிய மின்சாரம் உற்பத்தி செய்யமுடியாதபோது, அதனை ஈடுகட்ட எரிபொருள் மின்நிலையங்களி லிருந்து அதிக விலையில் மின் சாரம் பெறப்படுகிறது. இந்த மேலதிகச் செலவை அரசாங்கம் மின்சார நுகர்வோர் மீதே கட்டண உயர்வாகச் சுமத்துகிறது. ஊழல் நிறைந்த அதே நிறுவனங்களுக்கே மீண்டும் புதிய ஒப்பந்தங்கள் வழங்கப்படுவது ஆபத்தான செயலாகும். மத்திய கிழக்குப் போர்ச் சூழலைப் பயன்படுத்தி முறையான எரிசக்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்குப் பதிலாக, அரசாங்கம் தொடர்ந்தும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது- என்றார். (ச-இ)



## பாரம்பரிய உணவகம் புலோலியில் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாரம்பரிய உணவகம் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை புலோலியில் திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி நிகழ்வில் கலந்கொண்டு உணவகத்தை திறந்து வைத்தார். (ச-17)

## போதைப்பொருள் கடத்தல் சொத்துகள் முடக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் சட்டவிரோதப் பணத்தைப் பயன்படுத்தித் தனது மனைவியின் பெயரில் வாங்கிய சொத்துக்கள் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில், சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

விசாரணைகளின் அடிப்படையில், ஜாஎல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெலிகம்பிட்டிய பகுதியில் அந்தப் பெண்ணின் பெயரில் வாங்கப்பட்ட சுமார் 400 இலட்சம் ரூபாய் பெறுமதியான மூன்று மாடி வீட்டையும் காணியையும் முடக்குவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)

## இ.போ.சபை டிப்போக்களில் தனியார் பஸ்களுக்கு எரிபொருள்

கொழும்பு, மார்ச் 16

தனியார் பேருந்துகளுக்கானஎரிபொருளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போக்கள் ஊடாக விநியோகிக்கப்படும் என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. எரிபொருள் விநியோகத்தை மேலாண்மை செய்யவும், அத்தியாவசியச் சேவைகளைத் தடையின்றி முன்னெடுக்கவும் இந்த விசேட வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தனியார் பேருந்துகள் எரிபொருள் நிரப்புநிலையங்களில் நீண்ட வரிசையில் நிற்பதைத் தவிர்க்கும் வகையில், அந்தந்தப் பகுதி டிப்போக்கள் மூலம் எரிபொருள் வழங்கப்படவுள்ளது. உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் வாகனங்களுக்கு, உரிய நிறுவனங்களுடன் இணைந்து விசேட பொறிமுறையின் கீழ் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## முதலீட்டுச் சபையின் பணிப்பாளராக ரேணுகா

கொழும்பு, மார்ச் 16

இலங்கையின் முதன்மை முதலீட்டு ஊக்குவிப்பு கட்டமைப்பான முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகமாக ரேணுகா வீரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்துக்கு முன்னதாக, ரேணுகா வீரக்கோன் சுமார் நான்கு ஆண்டுகளாக பதில் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வந்தார்.

ரேணுகா வீரக்கோன் இலங்கை முதலீட்டுச் சபையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டவராவார். அவர் பதில் பணிப்பாளர் நாயகமாகப் பொறுப்பேற்பதற்கு முன்பு முதலீட்டுச் சபையின் சிரேஷ்ட நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்றினார்.

அதேபோன்று அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான வசதிகளைச் செய்தல், கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் மூலோபாய முன்னெடுப்புகள் போன்றவற்றிலும் அவர் வலுவான பங்களிப்பை வழங்கியுள்ளார். (ச-இ)

## சும்மா இருந்த சங்கை...!

சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டி மாதிரி, திடீரெண்டு கியூ.ஆரைக் கொண்டந்து எல்லாரையும் தேவையில்லாத குழப்பத்துக்க தள்ளியிருக்குது திசைகாட்டி அரசாங்கம். ஈரானில சண்டை வெடிச்ச உடனேயே எங்கட ஆக்கள் வாகனங்களோட பெற்றோல் செற்றுகளுக்குப் படையெடுத்திட்டினம். எல்லாம் முந்தினகால அனுபவத்தாலதான் இப்பிடி நீட்டுக்கு கியூவில நிண்டு பெற்றோலை அடிச்சு வைச்சவை. எண்டாலும் அப்ப அரசாங்கம் சனங்களைக் கண்டபடி பேசினது. 'எல்லா எரிபொருளும் மே மாதம் வரை தாராளமா இருக்குது. அதால தேவையில்லாமல் செற்றுகளுக்கு முன்னால குவிஞ்சு நிண்டு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தாதையுங்கோ'எண்டு அரசாங்கம் சொன்னதை ஒருத்தரும் நம்பேலை. ஏனெண்டால் முந்தி கோத்தாபயவின்ர ஆட்சியிலையும், இஞ்ச பெற்றோல் வத்திக்கொண்டு போகேக்க கூட ' தாராளமா இருக்கு 'எண்டுதானே சொன்னவை. அப்பிடித்தான் இப்பவும் சொல்லுகினம் எண்டிட்டு, ரண்டு மூண்டு கிழமைக்குத் தேவையான பெற்றோலை எல்லாரும் அடிச்சு வைச்சபிறகுதான் செற்றுகளுக்கு முன்னால நிண்ட கியூ இல்லாமல் போனது.

அப்பிடி சனம் கியூவில நிண்டு அல்லோலகல்லோலப் படேக்க, 'முந்தினமாதிரி கியூ.ஆர்.முறையைக் கொண்டாங்கோ, வரிசை தன்ரபாட்டில இல்லாமல் போகும்' எண்டு கனபேர் அரசாங்கத்துக்கு புத்திமதி சொல்லிப்பாத்தவை. ஆனால் எல்லாமே எருமை மாட்டில பெய்த மழை மாதிரி பிரியோசனமில்லாமல் போட்டுது. 'எங்களிட்ட தாராளமா எரிபொருள் இருக்கேக்க ஏன் கியூ.ஆரை கொண்டரவேணும்?' எண்டு இளக்காரமாக் கேட்டுப்போட்டு இருந்திட்டினம். பிறகு ஒருமாதிரி லைன்யுகமும் முடிவுக்கு வந்திட்டு. எல்லாச் சனமும் றோட்டில வாகனங்களோட பெற்றோல், டீசலுக்கு அந்தரப்படேக்க ஒண்டுமே தெரியாதமாதிரி இருந்துபோட்டு எல்லாம் சுமுகமா மாறினதும், இப்ப மின்னாமல் முழங்காமல் கியூ.ஆர்.முறையை நேற்றில இருந்து கொண்டந்திருக்கினம். இப்பிடி திடீரெண்டு அரசாங்கம் கியூ.ஆர்.முறையைக் கொண்டந்ததால இனிப் பெற்றோல் கிடைக்குதோ தெரியேலை எண்டு நேற்று விடிய திரும்ப எல்லாரும் பெற்றோல் செற்றுக்கு முன்னால லைன்ல நிக்கத் தொடங்கிட்டினம். இப்ப சனத்தை லைனில நிக்க வைச்சு, செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தின பொறுப்பை அரசாங்கம் ஏற்குமோ?

தேவையான எரிபொருள் இருக்கெண்டு சொன்ன அரசாங்கம், மாதம் பிறந்த கொஞ்ச நாளிலேயே விலையைக் கூட்டேக்கையே சனம் உசாரா இருந்திருக்க வேணும். அவை விலையைக் கூட்டினதுக்கு காரணம், தவிச்சமுயல் அடிச்சு லாபம் பாக்கிறதுக்கு இல்லையாம். இப்பிடி விலையைக் கூட்டினால் சனம் பெற்றோல், டீசலை வாங்காமல் விட்டால், கொஞ்சநாளுக்கு இருப்பு இருக்கெண்டு சொல்லி தாக்காட்டலாம் எல்லோ. திண்ணையில கிடந்தவனுக்கு திடுக்கெண்டு கலியாணம் எண்ட கதையா, கியூ.ஆரை கொண்டந்ததால சனத்துக்கு கடும் குழப்பம். என்னென்ன குழப்பம் எண்டு நாளைக்கு பாப்பமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 16
பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய, வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின், 23ஆவது பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ப.மகேந்திரதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதி பிரேமனி பொன்னம்பலம் கலந்துகொள்வார். (க)

### மன்னாரில்

## முன்பள்ளிகள் அமைக்க காணிகள் ஒதுக்கித் தருக

மன்னார், மார்ச் 16
மன்னார் நகரசபைப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முன்பள்ளிகளின் அவசியத்தை உணர்ந்து அவற்றை அமைப்பதற்குப் பொதுமக்கள் மற்றும் அமைப்புகள் காணிகளை ஒதுக்கித் தரவேண்டும் என நகர சபை முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார். நகரசபைக்குச் சொந்தமான ஒரேயொரு நிரந்தர முன்பள்ளி இங்கு மட்டுமே உள்ளது. அந்த முன்பள்ளி, சனசமூக மற்றும் கிராமிய அபிவிருத்தி நிலையக் கட்டடங்களில் தற்காலிகமாக இயங்கிவருகின்றது. முறையான முன்பள்ளிகள் அருகில் இல்லாத காரணத்தினால், பெற்றோர் தமது பிள்ளைகளை மிகவும் தூர இடங்களுக்கு அழைத்துச்செல்ல வேண்டியுள்ளது. ஒரு முன்பள்ளிக் கட்டடம் அமைக்க குறைந்தது 25 முதல் 30 பேர்ச் காணி அவசியமாகும்.

போதுமான காணி கிடைக்கும் பட்சத்தில், நவீன கட்டடத்துடன் கூடிய சிறுவர் பூங்காவையும் அங்கு அமைக்கமுடியும். எனவே காணிகளை ஒதுக்கித்தர முன்வருபவர்கள் இதுகுறித்து நகரசபையுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-60)




## திருப்தி நிறைவாழ்வு தரும்

மனித வாழ்வில் எட்டாத ஆசைகளை வளர்த்துக்கொள்வதிலும் பார்க்க உள்ளதை வைத்துக்கொண்டு திருப்தியுடன் கூடிய முயற்சியால் உயர்வதே நிலையான மகிழ்வு தரும். விரலுக்கேற்ற வீக்கம் என்பது போல எமது நிலைக்கேற்ற நேர்மையான வாழ்வை அமைத்துக்கொள்வதே சிறந்தது. எமக்குத் தரப்பட்ட வாழ்வும், வசதியும், செழுமையும் இறைவனின் கொடையாகும். எமது நிலைக்கு மேல் உள்ளவரை நோக்காது எமக்குக் கீழ்மட்டத்திலும் நிறைய மக்கள் வாழ்கிறார்கள் என்பதை எண்ணி திருப்தி கொள்வோம். அங்கலாய்ப்பு, ஏக்கங்களைத் தவிர்த்து எதையும் எதிர்கொள்ளும் மனப்பாங்கை வளர்ப்போம். ஏனெனில் பறவைகள், காட்டுச்செடிகள், மலர்களைப் பாருங்கள். இவை விதைப்பதும் இல்லை, அறுப்பதும் இல்லை, சேர்த்து வைப்பதுமில்லை. ஆனால் அவற்றுக்கெல்லாம் கடவுள் உணவும், அழகும், பராமரிப்பும் வழங்கி வாழ்வளிக்கிறார் என்றால் இவற்றை விட மேலான மனிதனை இறைவன் அணிசெய்து நலன்களைப் பொழியமாட்டாரா? எனவே எதைக் குடிப்போம், எதை உண்போம், எவற்றை சேர்த்துவைப்போம் என்ற கவலையை விடுத்து நீதி, நேர்மை, நம்பிக்கை, விடாமுயற்சியுடன் இறைவனின் கரங்களில் எம்மை ஒப்படைத்து திருப்தியுடன் வாழ்வோம். போதுமென்ற மனமிருந்தால் வாழ்வு பொன்னாக மாறும்.

● யே.சுபீட்சன்ரிபியுஸ்
கொழும்புத்துறை

நெடுந்தீவு கத்தோலிக்க திருஅவையின் ஆளுகைக்குட்பட்ட கற்கடதீவு புனித அந்தோனியார் பெருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பங்குத்தந்தை அருட்பணி ப.பத்திநாதன் அடிகளாரின் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. (ச-17)



## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 16
யாழ்ப்பாணம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மயிலணி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பாலசுப்பிரமணியம்பிரதீபன்தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவலிங்கம் புஸ்பகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர்களான இணுவில் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் மகேந்திரன் சிவானந்தன், நடேசு தயாளன் மற்றும் திருமதி புஸ்பகலா தியாகபாலன், கௌரவ விருந்தினராக பொன்னுத்துரை ஸ்ரீரஞ்சன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-422)

## நகுலேஸ்வரத்தில் பிரதோஷ விரதம்

யாழ்ப்பாணம்,மார்ச் 16
வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை பிரதோஷ விரத உற்சவம் இடம்பெறும். இன்று மாலை 4 மணியளவில் சிறப்பு அபிஷேக வழிபாடுகளுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறும். வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நகுலேஸ்வரப்பெருமான் தேவி சமேதராக உள்வீதி உலாவரும் திருக்காட்சி இடம்பெறும். (க-66)

## நல்லூரிலிருந்து தரிசன யாத்திரை

யாழ்ப்பாணம்,மார்ச் 16
இலங்கை முதல் உதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில், நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து, சிவனொளிபாதமலை நோக்கிய தரிசன யாத்திரை எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தத் தரிசன யாத்திரையில் கலந்துகொள்ள விரும்பும் அடியவர்கள் விரைவாகத் தங்களது முழுப்பெயர், முகவரி, அடையாள இலக்கம் போன்ற விவரங்களை 0779236552 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்புமாறு, இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் கேட்டுள்ளார். (க-66)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** இன்று காரியங்கள் முடிவதில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டு நீங்கும். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** இன்றைக்கு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# தன்முனைப்பும் தாமதமும்...!

உலகளாவிய எரிபொருள் நெருக்கடியைத் தொடர்ந்து, நாட்டில் மீண்டும் கியூ.ஆர். முறை இரவோடு இரவாக நடைமுறைக்கு வந்திருக்கின்றது. கியூ.ஆர். முறைமையில் எரிபொருள்களைப் பெறுவது இலங்கையர்களுக்குப் புதிதல்ல. கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில், மருந்துக்கும் இல்லாத விடயமாக எரிபொருள்கள் மாறின. இதனால் ஏற்பட்ட போராட்டங்கள் மற்றும் கலவரங்கள் காரணமாகவே கோத்தாபய ஆட்சியைக் கைவிட்டுத் தப்பியோடினார். அதன்பின்னர் ஆட்சியைப் பொறுப்பேற்ற ரணில் அரசாங்கம், அப்போதைய எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் கியூ.ஆர். முறையை நடைமுறைப்படுத்தியது. இதையடுத்து, எரிபொருள் நெருக்கடிகள் நாடெங்கும் உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட்டு, நாடு ஓரளவேனும் இயல்பு நிலைக்குத் திரும்பியது. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர், நடைமுறையில் இருந்த திட்டத்தை, தற்போதைய நெருக்கடியைக் கருத்திற்கொண்டு மீள நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது திசைகாட்டி அரசாங்கம். ஆனால், கியூ.ஆர். முறையை மீளக் கொண்டுவந்த காலச்சூழல், திட்டமிடல் தொடர்பில் கருத்திற்கொள்ளவேண்டியது அவசியம்.

உலகின் மிக முக்கியமான பெற்றோலிய நாடான ஈரானுடன் அமெரிக்கா நேரடி மோதலில் ஏற்பட்ட மறுநாளே தமது எரிபொருள் இருப்பை உறுதி செய்யும் பணியில் உலக நாடுகள் இறங்கிவிட்டன. ஹோர்முஸ் நீரிணை மூடப்படும், உச்சபட்ச ஏவுகணைத் தொழில்நுட்பம் உள்ள ஈரானால் உலகளாவிய நெருக்கடிகள் ஏற்படுத்தப்படும் உள்ளிட்ட வெளிப்படையான அச்சுறுத்தல்களைக் கருத்திற்கொண்டே அந்த நாடுகள் இவ்வாறு செயற்படத் தலைப்பட்டன. ஆதலால், இலங்கையிலும் கியூ.ஆர். முறையை அறிமுகப்படுத்தி, எரிபொருள் இருப்பை உறுதி செய்யவேண்டும், எரிபொருள்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும் என்ற 'நிபுணத்துவக் குரல்கள்' வலுக்கவே செய்தன. ஆனால், தாம் மட்டுமே புத்திசாலிகள் என்ற தோரணையில் செயற்பட்டுவரும் திசைகாட்டி அரசாங்கம், இந்த அறிவுரைகளை கிஞ்சித்தும் பொருட்படுத்தவில்லை. ஈரானில் இருந்து இலங்கைக்கு எரிபொருள்கள் வருவதில்லை. ஆதலால், இந்தப் போரால் இலங்கைக்குப் பாதிப்பில்லை என்ற முட்டாள்தனமான - மட்டமான பதிலையே அரசாங்கத்தினரும், திணைக்களப் பிரதானிகளும் முன்வைத்தனர்.

ஈரான் அழிக்கப்படும்போது, அந்த நாடு தனது வெற்றிடத்தை உணரச் செய்வதற்காக உலகமெங்கும் உள்ள எரிபொருள் இருப்பை இலக்குவைக்கும். இதுவே உளவியல். இதை ஈரான் வெளிப்படையாகக் கூறவும் செய்தது. மத்திய கிழக்கில் இன்று ஈரானால் தாக்கப்படாத எண்ணெய் வயல்களே இல்லை. ஆக, 'ஓர் அரசாங்கம்' என்ற வகையில், போரின் போக்கை நாடிபிடித்துப் பார்ப்பதற்கு திசைகாட்டி அரசாங்கம் தவறியது. இதனால்தான், ஏழு தொடக்கம் பத்து நாள்களுக்கு முன்னர் நடைமுறைக்கு வரவேண்டிய கியூ.ஆர். முறை, தாமதமாகத் தற்போது அமுலுக்கு வந்துள்ளது. இதேவேளை கியூ.ஆர். குறியீட்டை நடைமுறைப்படுத்தும்போது சில சிக்கல்கள் ஏற்படவே செய்யும். மோட்டார் சைக்கிள்களுக்கு வாரத்துக்கு ஐந்து லீற்றர் பெற்றோலே வழங்கப்படவுள்ளது. தொலைதூரப் பணியாளர்கள், மாவட்டம் விட்டு மாவட்டம் செல்வோர் எரிபொருள் பற்றாக்குறையை எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படலாம். அவர்களுக்காக விசேட திட்டங்கள் உடனடியாக வகுக்கப்படவேண்டும். உலகில் எரிபொருளால் ஏற்படும் அனைத்து நெருக்கடிகளும், அந்தந்த அரசாங்கங்களின் ஆயுளைக் குறைத்திருக்கின்றன என்பதே வரலாறு.






## பொய்யாமொழி

**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு**

**பொருள்:** அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தி இருக்கின்ற உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.






# 3-5 வயதுச் சிறுவர்களுக்கு இணையக்கல்விக்குத் தடை!

**கொழும்பு,மார்ச் 16**
**3 முதல் 5 வயது வரையிலான சிறுவர்களுக்கு இணையவழி ஊடாகக் கற்பிப்பது அவர்களின் மூளை வளர்ச்சி மற்றும் உடல் ஆரோக்கியத்துக்கு தீங்கானது என்பதால், இத்தகைய வகுப்புகளைத் தாம் அங்கீகரிக்கவில்லை என மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**

முன்சிறுவர் பருவத்தில் கற்றல் என்பது சூழலோடு இணைந்த செயற்பாடுகள் மூலமே அமையவேண்டும். திரையைப் பார்த்துப் படிப்பதால் சிறுவர்களின் சமூகத்திறன் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.
டிஜிற்றல் திரைகளை அதிக நேரம் பார்ப்பது பிள்ளைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்தும் திறனைக் குறைப்பதுடன், ஆக்கபூர்வமான சிந்தனைக்குத் தடையாக அமைகிறது.
சிறுவர்களை அதிகளவில் தொழில்நுட்பக் கருவிகளுக்கு உட்படுத்துவது அவர்களின் மென்மையான மூளை வளர்ச்சிக்கு நேரடித் தீங்கை விளைவிக்கும்.
பிள்ளைகளின் மன மற்றும் உடல் ஆரோக்கியத்தைக் கருத்திற்கொண்டு, இவ்வாறான இணையவழி வகுப்புகளில் அவர்களை ஈடுபடுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (ச-இ)

# மோ.சைக்கிள் மோதியதில் பெண் உயிரிழப்பு

கம்பஹா, மார்ச் 16
கம்பஹா - தொம்பே பூகொட வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியைக் கடக்க முயன்றபோது பெண் பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.
உயிரிழந்தவர் 47 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.
விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை தொம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)






# சுற்றிவளைப்பு 681 பேர் கைது

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 681 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அதேவேளை கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 286 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 160 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அசோக ரன்வலவுக்கு பிடியாணை

கொழும்பு,மார்ச் 16
முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஹெய்யன்துடுவ - தெனியமுல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. அவர் அன்றைய தினம் நீதின்றில் முன்னிலையாகவில்லை. இதன் காரணமாக, அவரைக் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மஹர நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-இ)

# 'டித்வா' நிவாரணப் பொருள்கள் அபகரித்த அதிகாரிகள் கைது!

கொழும்பு,மார்ச் 16
டித்வா' புயலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தாலும் ஏனைய நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களைத் தமது வீடுகளில் பதுக்கி வைத்திருந்த இரண்டு பெண் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். அரநாயக்க பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலை இனியும் தாமதிக்க முடியாது

## நாடாளுமன்றக்குழுவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்து

**கொழும்பு, மார்ச் 16**

**"ஜனநாயகத்தைக் காக்க மாகாணசபைத் தேர்தல் அவசியமாகும். மாகாணசபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட செயற்குழு, தனது அறிக்கையைத் தாமதமின்றி சமர்ப்பிக்கவேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பல ஆண்டுகளாக மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளமை ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதமானது. கடந்த கால அரசாங்கங்கள் இந்தச் சட்டச் சிக்கலைத் தீர்க்க எடுத்த முயற்சிகள் எவையும் வெற்றிபெறவில்லை.

தற்போது நாடாளுமன்றத்தினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட செயற்குழு தனது முதலாவது கூட்டத்தை நடத்தியதில் இருந்து மூன்று மாத காலத்துக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும். ஏற்கனவே ஆணைக்குழு சார்பில் பல்வேறு பரிந்துரைகள்முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, மேலதிக கால தாமதமின்றி அறிக்கையைச் சமர்ப்பித்து, தேர்தலை நடத்துவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு எவ்வித நிதி நெருக்கடியும் கிடையாது. நடப்பு வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

எந்தத் தேர்தல் முறையில் நடத்துவது என்ற கொள்கை ரீதியான முடிவு எட்டப்பட்டால், உடனடியாகச் சுதந்திரமான மற்றும் நீதியான முறையில் தேர்தலை நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக உள்ளது - என்றார். (ச-இ)

### வடக்கிலுள்ள

## உடற்பயிற்சி நிலையங்கள் பதிவுகளை மேற்கொள்க!

யாழ்ப்பாணம்,மார்ச் 16

வடமாகாணத்தில் பதிவுகள் இன்றி இயங்கி வரும் உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் உடற்கட்டமைப்பு மையங்களை முறைப்படுத்துவதற்கு யாழ். மாவட்ட உடற்கட்டமைப்புச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பாகச் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.ஜேசுதாஸ் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் தற்பொழுது ஏராளமான உடற்பயிற்சி நிலையங்கள் இயங்கிவருகின்றன. இவற்றில் பல நிலையங்கள் இன்னமும் பதிவுசெய்யப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது. எனவே அனைத்து உடற்பயிற்சி நிலையங்களும் உடனடியாக யாழ். மாவட்ட உடற்கட்டமைப்புச் சங்கத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும்.

பதிவுகளை மேற்கொள்ள தலைவர் பி.நந்தகுமார் - 077 2241786, செயளலாளர் எஸ். ஜேசுதாஸ் செயலாளர் -077 4228934 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொள்ளவும்.

வடமாகாணத்தில் உடற்கட்டமைப்புத் துறையை ஒரு கட்டுக்கோப்பான நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர அனைத்து உடற்பயிற்சி மையங்களின் உரிமையாளர்களும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியம் என்றும் சங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (ச)

## ஈழத்தமிழர்களின் உரிமைகள் மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார்,மார்ச் 16

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச வெளியகப் பொறிமுறையூடாக வென்றெடுப்பதன் அவசியம் மற்றும் திருகோணமலைப் பிரகடனம் தொடர்பான விசேட கலந்துரையாடல் மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்று அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில், ஈழத்தமிழர்கள் சிறுபான்மையினர் அல்ல. அவர்கள் தங்களுக்கெனத் தனித்துவமான கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட ஒரு 'தேசிய இனம்' என்பது ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டது. தமிழர்களின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை சர்வதேசச் சட்டங்கள் மற்றும் வெளியகப் பொறிமுறைகள் ஊடாக எவ்வாறு வென்றெடுக்கமுடியும் என்பது குறித்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

கருத்தரங்கின் ஒரு பகுதியாக, பொதுமக்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. தாயகத்தில் தமிழர்களின் இருப்பு மற்றும் அரசியல் எதிர்காலம் குறித்து மக்கள் தங்கள் ஆதங்கங்களையும், எதிர்பார்ப்புகளையும் பகிர்ந்து கொண்டனர். (க-213)



வேலணைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான 2026ஆம் ஆண்டுக்கான குழுநிலைப் போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது.

முதற்போட்டியாக ஆண் - பெண் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப்போட்டிகள் அம்பிகை நகர் மகேஸ்வரி மைதானத்தில் நடைபெற்றது. (ச-9)


## கொக்குளாயில் உப்பளம் அமைப்பு த.தே.மக்கள் முன்னணி ஆராய்வு

முல்லைத்தீவு,மார்ச் 16

கொக்குளாய் மத்தியில் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் பெரும்பான்மையைச் சேர்ந்த சிங்களவர்களால், அத்துமீறி உப்பளம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை நேரில் சென்று பார்வையிட்டதுடன், மக்கள் எதிர்நோக்கும் பாதிப்புகளையும் கேட்டறிந்தார். அதேவேளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், பிரதேச சபை, வனஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் இந்த விடயத்தில் பாராமுகமாகச் செயற்படுகின்றனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (க-66)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, வலிகாமம் வடக்குப் பிரதேசசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையிலான பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள், காங்கேசன்துறையிலுள்ள பிரதேசசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. (க-66)



## தமிழ்ப்பெயர்த்தொகுப்பு நூல் சாவகச்சேரியில் அறிமுகம்!

சாவகச்சேரி நகரசபையின் ஒழுங்கமைப்பில், தமிழமுதம் வெளியீடான தமிழ்ப்பெயர்த் தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு, சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. நகரசபைத் தவிசாளர் வ.சிறிபிரகாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், தமிழமுதம் பணிக்குழுவைச் சேர்ந்த வெற்றி அரசன் நூல் அறிமுக உரையை நிகழ்த்தியதைத் தொடர்ந்து, கருத்துரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து தமிழ்ப் பெயர்த் தொகுப்பு நூலின் பிரதிகள் வழங்கப்பட்டன. (க-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரானின் உச்ச தலைவர்

# மொஜ்தபா கமேனி உயிருடன் இல்லை

## தகவல்கள் கிடைத்துள்ளன என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவிப்பு

**டெல்அவிவ், மார்ச் 16**

**ஈரானின் உச்ச தலைவர் மொஜ்தபா கமேனி உயிருடன் இல்லை என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

மத்திய கிழக்குப் போர் தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அதிபர் ட்ரம்ப் நேர்காணல் வழங்கியுள்ளார். இதன்போதே, ஈரானின் உச்ச தலைவர் உயிருடன் இல்லை எனத் தகவல் கிடைத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

மொஜ்தபா கமேனி உயிருடன் இருந்தால், அவர் தனது நாட்டுக்கு நன்மையான விடயங்களைச் செய்ய வேண்டும். அதுதான் சரணடைவது. சரணடையாத பட்சத்தில் நாங்கள் ஈரானியர்களை விடமாட்டோம். ஈரானியத்தலைவர்கள்தொடர்ந்து வேட்டையாடப்படுவார்கள். ஈரானின் திறன்கள் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாள்களில் அழிக்கப்படும். அமெரிக்கப் படைகளின் இருப்பிடங்கள் தொடர்பில், ரஷ்ய உளவுத்துறைதான் ஈரானுக்குத் தகவல் வழங்குகின்றது எனத் தெரியவருகின்றது.

அதுதொடர்பில் எமக்கு எந்தக் கவலையும் இல்லை. ஈரானை வலுவிழக்கச் செய்வதே எனது நோக்கம். அதுவரை போர்நிறுத்தம் கிடையாது-என்றார். (ம)

## ஹோர்முஸ் நீரிணையில் பதற்றம் மேலும் உச்சம்

### போர்க்கப்பல்களை அனுப்புமாறு நட்பு நாடுகளுக்கு ட்ரம்ப் அழைப்பு

வொஷிங்டன், மார்ச் 16

ஹோர்மூஸ் நீரிணையைப் பாதுகாப்பதற்காக உலக நாடுகள் தமது போர்க் கப்பல்களை அனுப்பவேண்டும் என்று, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

ஹோர்மூஸ் நீரிணையைக் கடக்கும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ள ஈரான், அந்த வழித்தடத்தை முற்றாக முடக்கிவைத்துள்ளது. அமெரிக்காவால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதிலும், ஹோர்மூஸ் நீரிணையைத் திறப்பதற்கு ஈரான் திட்டவட்டமாக மறுத்துள்ளது. இதையடுத்தே, ஹோர்மூஸ் நீரிணையைப் பாதுகாக்க முன்வருமாறு உலக நாடுகளை ட்ரம்ப் அழைத்துள்ளார். ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது-


ஈரானின் அச்சுறுத்தலால் உலகம் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. ஹோர்மூஸ் நீரிணை முடக்கப்பட்டுள்ளதால், பல நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே, இக்கட்டான நிலையை எதிர்கொண்டுள்ள நாடுகள், ஹோர்மூஸ் நீரிணையைப் பாதுகாப்பதற்குத் தமது போர்க்கப்பல்களை அனுப்பவேண்டும்.

ஹோர்மூஸை ஈரான் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது. அந்த நாடு ட்ரோன் தாக்குதல்களை நடத்துவதற்கும் கூடுதலான சாத்தியங்கள் உள்ளன. எனினும், அந்த நீரிணையை எந்நேரமும் திறந்துவைத்திருப்பதை நாம் உறுதிசெய்யவேண்டும்- என்றார். (ம)

## சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துக தமிழக எதிர்க்கட்சிகள் போராட்டம்

சென்னை, மார்ச் 16

தமிழகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைப்படுத்துமாறு வலியுறுத்தி, தமிழக எதிர்க்கட்சிகள் இணைந்து எதிர்வரும் நாளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளன. தமிழகத்தில் சிறுமிகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் சடுதியாக அதிகரித்து வருகின்றன. இதையடுத்தே, சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்தி, பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்திப் போராட்டம் நடத்த எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இந்தப் போராட்டங்கள் இடம்பெறும் என்றும் கூறப்பட்டுள்ளது. அ.தி.மு.க.வால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டத்துக்கு, பா.ஜ.க.வும், பாட்டாளி மக்கள் கட்சியும் ஆதரவு வழங்கியுள்ளன. 'நாம் தமிழர்', தமிழக வெற்றிக் கழகம் ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், அந்தக் கட்சிகள் தமது நிலைப்பாட்டை இதுவரை அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



இஸ்ரேலின்

## இராணுவத் தளங்கள் மீது ஈரான் சரமாரித் தாக்குதல்!

தெஹ்ரோன், மார்ச் 16

இஸ்ரேலின் ஐந்துக்கு மேற்பட்ட இராணுவத் தளங்களில், ஈரான் நேற்று அதிகாலை சரமாரியான தாக்குதல்களை நடத்தியுள்ளது என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.


மத்திய கிழக்கில் இஸ்ரேல் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தபோதிலும், அந்த அழைப்பை ஈரான் முற்றாக நிராகரித்துள்ளது. இஸ்ரேலின் சக்திவாய்ந்த ரேடர்கள் அழிக்கப்பட்டுள்ளதால், ஈரானுக்கு சவாலற்ற இலக்காக இஸ்ரேல் மாறிவருகின்றது. இவ்வாறான நிலையிலேயே, இஸ்ரேலின் ஐந்துக்கும் மேற்பட்ட இராணுவத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

டெல் அவிவ் நகரிலுள்ள இரண்டு விமானப் படைத்தளங்கள், ஷின் பெட் இராணுவத் தலைமையகம், பால்மாச்சிம் விமானப் படைத்தளம், இஸ்ரேலின் தெற்குப் பகுதியில் உள்ள இரண்டு பாரிய விமானப்படைத் தளங்கள் ஆகியனவும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. தனது படைத் தளங்கள் தாக்கப்பட்டதை ஏற்றுள்ள இஸ்ரேல், ஈரானுக்கு சக்திவாய்ந்த பதிலடி வழங்கப்படும் என்றும் கூறியுள்ளது.

இஸ்ரேல் ஒரு நாடாக உருவான பின்னர், ஒரே நேரத்தில் ஐந்து முதன்மை இராணுவத் தளங்கள் மீது இதுவரை தாக்குதல் நடத்தப்பட்டதில்லை. ஆதலால், இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து, ஈரானின் ஏவுகணைப் பலம் தொடர்பில் புதிய விவாதங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

சவூதியில் தரித்துநின்ற

## அமெரிக்க விமானங்கள் ஈரானால் தாக்கி அழிப்பு



ரியாத், மார்ச் 16

சவூதி அரேபியாவின் இராணுவத்தளத்தில் தரித்துநின்ற அமெரிக்காவின் ஐந்து இராணுவ விமானங்களை, ஈரான் ஒரே நேரத்தில் தாக்கி அழித்துள்ளது. ஈரானுக்கு எதிரான போரில், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள தனது இராணுவத் தளங்கள் அனைத்தையும் அமெரிக்கா பயன்படுத்தி வருகின்றது. இவ்வாறாக, சவூதி அரேபிய இராணுவத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த, அமெரிக்காவின் ஐந்து எரிபொருள் நிரப்பு விமானங்களையே ட்ரோன் தாக்குதல் மூலம் ஈரான் அழித்துள்ளது.

இதையடுத்து, சவூதியின் பாதுகாப்பை அனைத்து வகையிலும் உறுதி செய்வதற்கு, எமது இராணுவத்தினர் தயாராக உள்ளனர். நிலைமைகளைப் பொறுத்து அடுத்தகட்டத் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று சவூதி அரேபியா குறிப்பிட்டுள்ளது. (ம)

## தி.மு.க. கூட்டணியில் கருத்து வேறுபாடுகள்

### சொல்கின்றார் எடப்பாடி

சென்னை, மார்ச் 16

தி.மு.க.வின் கூட்டணியில் அளவுக்கு அதிகமான கட்சிகள் இருப்பதால், அங்கு கருத்துமுரண்பாடு உச்சம் பெற்றுள்ளது என, அ.தி.மு.க.வின் பொதுச்செயலர் எடப்பாடி பழனிச்சாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

தி.மு.க.வினர் எத்தனை கட்சிகளுடன் கூட்டணி அமைத்தாலும், அவர்கள் எம்மால் விரட்டப்படுவது உறுதி. இருநூறுக்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கைப்பற்றுவோம் என்று முதல்வர் ஸ்டாலின் கூறுகின்றார். ஆனால், பிரதான எதிர்க்கட்சி என்ற அங்கீகாரம்கூட தி.மு.க.வுக்குக் கிடைக்காது என்பதே நிலைமையாக உள்ளது- என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உடுப்பிட்டி இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் சிவலிங்கம் லிங்கனதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலயத்தின் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணபிள்ளை பிரதீபா கலந்துசிறப்பித்தார். (ச-555)


## மணமகள் தேவை

1989ஆம் ஆண்டு பிறந்த கும்ப ராசி, அவிட்டம் நட்சத்திரம் உடைய யாழ்ப்பாணம் இந்து (V) குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 465 1541

(CS 31456) A


## குருதிக்கொடை

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் இன்டராக்ட் கிளப் ஏற்பாடு செய்து நடத்திய இரத்ததான முகாம் கடந்த வியாழக் கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. முகாமில் ஆசிரி யர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் என முப்பதுக்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கினர்.

யாழ்.போதனா மருத்துவ மனையின் இரத்தவங்கிப் பிரிவினர் நேரடியாகக் கலந்துகொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். (41-66)


"ஓம் ஸ்ரீ விராட் விஸ்வ பிரம்மனே நமஹ"

## சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

## வருடாந்தப் பங்குனிப் பொங்கல் உற்சவம்

விதிக்கு மொரு விதியாகி யெமை யாளும் அன்னையே - நின்
பதியி லாக்கும் பொங்கலெல்லாம் உன் அருளாத லாகுமம்மா

**அம்பிகை அடியார்களே......**

நிகழும் பங்குனி மூன்றாம் நாள் 17.03.2026 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறவிருக்கும் "விளக்கு வைப்புடன்" ஆரம்பமாகும் அம்பிகையின் பொங்கல் உற்சவமானது வழமை போன்று சிறப்புடன் நிகழ்வதற்கு திருவருள் கூடியுள்ளது.

முதலாம் பொங்கல் (பெரிய வேள்வி) 24.03.2026 செவ்வாய்க்கிழமை

இரண்டாம் பொங்கல் (எட்டாம்மடை) 31.03.2026 செவ்வாய்க்கிழமை

அடியார் பெருமக்கள் அம்பிகையின் பொங்கல் வைபவங்களில் கலந்து இஷ்ட சித்திகளையும் பொற்றுய்வீர்களாக.

**வர்த்தகர்களுக்கான அறிவித்தல்**

பொங்கல் உற்சவ காலங்களில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்கள் 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஆலயத்திற்கு வருகை தந்து தங்களுக்கான இடங்களை பதிவுசெய்து அதற்குரிய பணத்தினையும் செலுத்திகொள்ளவும்.

**பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், சுழிபுரம்.** **ஆலய பரிபாலன சபையினர்.**

(cs.60997) (N-1)




வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக பழைய மாணவர் (கனடா) கு.சிவராசா, பழையமாணவர் தொழிலதிபர் (லண்டன்) பா.பிரகலாதன், பழைய மாணவர் தொழில் அதிபர் (கனடா) சி.சுகந்தகுமார், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-41-159)


## மரண அறிவித்தல்



தோற்றம் 02.11.1954 மறைவு 11.03.2026

### அருமைத்துரை வீனா

110, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருமைத்துரை வீனா அவர்கள் கடந்த 11.03.2026 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.03.2026) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித திரேசாள் ஆலயத்தில் முற்பகல் 10.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(CS 30958) A





## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

### வல்லிபுரம் அரியதுரை

(ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்)

தோற்றம் 24.11.1939 மறைவு 14.02.2026

தில்லை கட்டி சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் சோமராந் தோட்டம் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது தில்லை கட்டி சுன்னாகத்தில் வசித்து வந்தவருமாகிய வல்லிபுரம் அரியதுரை அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி

குடும்பத்தின் குல விளக்கே
அன்பை பொழிந்து
ஆதரவாய் இருந்து
இன்ப துன்பத்தில் தோள் கொடுத்து
ஈடில்லா கல்வி அளித்து
உண்மையை உரைத்து
ஊக்கமதை தந்து
எளிமையாய் வாழ்ந்து
ஏணி போல் ஏற்றம் தந்த
ஐயமின்றி தியாகத்தின் திருவுருவமாய்
ஒப்பில்லா மனிதராய்
ஓய்வின்றி உழைத்து
ஔடதமாய் குடும்பத்தைக் காத்தவரே
காலக் கொடுமையால் இறைவன்
எங்கள் கண் முன்னால் உங்களை வா
என்று அழைத்த காரணத்தை நாமறியோம்
எங்கள் பாச ஒளி விளக்கே
மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் திருமுகம் எங்கள் நெஞ்சை
விட்டு என்றும் அகலா
நீர் மறைந்த நாள் முதலாய்
நிம்மதி எமக்கு இல்லை
நினைவிழந்து செயலிழந்து
நிற்கதியாய் நிற்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அன்னாரின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று பலவழிகளிலும் எம்மோடு தொடர்பு கொண்டு தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும் மேலும் பல்வேறு வகையில் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

சோமராந் தோட்டம்,உடுவில் கிழக்கு , சுன்னாகம் குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜகோபுர அடிக்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தொல்புரம் சீக்காய்ப்பதி மடத்தடிப் பிள்ளையார் ஆலயப் புதிய பஞ்ச தள இராஜகோபுர அடிக்கல் நடும் விழா இன்று திங்கட்கிழமை காலை 6 மணி முதல் காலை 7.30 மணி வரையான சுப வேளையில் இடம் பெறவுள்ளது. (ச-66)

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 12 . 1973



இறப்பு 14 . 03 . 2026

### செல்வக்காந்தராஜா செல்வானந்தா (செல்வா)

சங்கானை காளிகோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வக்காந்தராஜா செல்வானந்தா (செல்வா) அவர்கள் கடந்த (14.03.2026) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வக்காந்தராஜா கனகலட்சுமி தம்பதியினரின் மூத்த புதல்வனும், செல்லத்துரை தங்கேஸ்வரி, சபாபதிப்பிள்ளை தங்கம்மா ஆகியோரின் பேரனும், செல்வக்குமார் (பிரான்ஸ்), கவிதா, செல்வேந்திரா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குகானந்தன், சுதர்சினி, நிசூதினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நேசிகன், லக்சிகன், டிலக்சிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், கிசோர், சானுயன், நிருசன், திலக்சன், ஜதீசன், தீசிகன், கிருசன், அனுருத், ஆரணா, ஆருத் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2026) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 99 06 084

(CS 31455) A

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு




கடந்த 14.02.2026 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புச் சகோதரன்

**அமரர் குணநாயகம் குமரநாயகம்**

தோற்றம் 28.05.1963 — மறைவு 14.02.2026


அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.03.2026) திங்கட்கிமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது சகோதரனின் இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

(CS/60989) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 02 . 1936



மறைவு 14 . 03 . 2026

### இளையதம்பி பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற வரிமதிப்பீட்டாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி - அன்னலட்சுமி தம்பதியரின் புதல்வனும், செல்வராணி (மஞ்சள் டீச்சர்) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற பாலமுருகன் மற்றும் பாலமோகன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), பாலரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திகா (கணக்காளர் - அவுஸ்திரேலியா), அனுஜா (கணினி பொறியியலாளர்) ஆகியோரின் மாமனாரும், அக்சரா, தனரூபன் ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், நாகேந்திரம், சண்முகராசா, குஞ்சரலிங்கம், தேவராணி, புஸ்பராணி, இந்திராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி சந்தை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (16.03.2026) திங்கட்கிழமை பி.ப. 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மாயனத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.
070 159 1083

(CS/60996) N-1

## OBITUARY NOTICE

Safe in the arms of Jesus

12 . January . 1937



15 . March . 2026

### BEN LAWRENCE

It is with deep sorrow that we announce the passing of Mr. Ben Lawrence, who entered eternal glory on 15 March 2026.

Dearly beloved husband of the late Dulcie Lawrence, Beloved son of the late Mr. and Mrs. Marianthamby Lawrence. Loving brother of Alex Lawrence, Pushpam Coilparampil, Thiraviam Thomas, Ranee Pararajalingam (all predeceased), and Pathma Selvanathan, Cherished Dadda of Shereen, the late Shirley, Maureen, Morley, and Dalreen. Loving father-in-law of the late Athithan, Ranjit Wijeyaratnam, and Damayanthi, Devoted grandfather of Nivedha and Ainsley , Sharmalene, Devin, Deanna, Sheran, Danya, and Danisha, Mr. Ben Lawrence was an old boy of St. Michael's College, Batticaloa, and St. Patrick's College, Jaffna. He began his professional career in medical sales at Glaxo and later served as a Marketing Consultant at General Industries before moving onto Tea exports, based in Colombo, Singapore, and Jeddah,

**Funeral Service:**

The funeral service will be held at White House Funeral Home, Jaffna on Monday, March 16th at 3 pm followed by burial at Manipay CACM Cemetery.

(CS 31457)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலை நடத்தாதது மக்களின் அடிப்படை உரிமை மறுப்பே!

## கரு ஜயசூரிய தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 16**
**மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் கடந்த 9 ஆண்டுகளாக இழுத்தடிக்கப்படுவது நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் அநீதியான செயல் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்**

அவர் மேலும் தெரிவிக்கையில், 9 ஆண்டுகளாகத் தேர்தல் நடத்தப்படாதது ஜனநாயகத்துக்கு இழைக்கப்படும் அநீதியாகும். நீண்டகாலமாகத் தமக்கான ஆட்சி அதிகாரத்துக்காகப் போராடி வரும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் உரிமையை வழங்குவது அரசின் கடமை. மாகாண சபைகள் இயங்காத காரணத்தால் அரச இயந்திரம் முறையாக இயங்க முடியாமல் போயுள்ளதுடன், நாட்டின் அபிவிருத்திப்பணிகளும் முடங்கியுள்ளன. எனவே, அனைத்துத் தேசிய மற்றும் பிராந்தியக் கட்சிகளும் ஒன்றிணைந்து இதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தவேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும். இந்த முறைமை ஒழிக்கப்படுவதன் மூலம் இலங்கையில் ஒரு ஆரோக்கியமான புதிய அரசியல் கலாசாரம் உருவாகும்- என்றார். (ச-இ)


# விஞ்ஞானப் பட்டநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 14
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் விஞ்ஞானமானிப் பட்டநெறி (பொது/சிறப்பு) 2026/27 (BSc in Science Honors/General) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் உயிரியல் அல்லது கணிதம் ஆகிய பிரிவுகளில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் விஞ்ஞானத்தில் உயர் தரச் சான்றிதழ் கற்கைநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் தரவிறக்கம் செய்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு யாழ். பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும், 021 2223374 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் தொடர்பை மேற்கொண்டு விண்ணப்பிக்கமுடியும் என்று யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

# ஐ.ம.சக்திக் குழுவினர் நாகவிகாரையில் வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 16
ஐக்கிய மக்கள் சக்தியின் உயர்மட்டக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள நிலையில், நேற்றுமுன்தினம் ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர். ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் புத்திக்க பத்திரண, யாழ்.மாவட்ட அமைப்பாளர் அருந்தவநாதன் அனோஜன் உள்ளிட்ட தொகுதி அமைப்பாளர்கள் விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டதுடன், விகாராதிபதி மீகஹஜந்துரே சிறி விமல தேரருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (க -20)





# மரம் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிப்பு!

கிளிநொச்சி, மார்ச் 16
கிளிநொச்சி டிப்போ சந்திப் பகுதியில் நேற்று மிகப்பெரிய மரம் ஒன்று முறிந்து ஏ-9 பிரதான வீதியின் குறுக்காக வீழ்ந்ததில், அவ்வீதியூடான போக்குவரத்து சிலமணி நேரங்கள் பாதிப்படைந்தது. வீதியில் வீழ்ந்துள்ள மரத்தை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் போக்குவரத்துப் பொலிஸார் ஈடுபட்டனர். (ச-28)

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்றுவரும் வாரந்த நிகழ்வில், சைவப்புலவர் பொன்.சந்திரவேல் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து, மாணவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு, பரிசில்கள் வழங்கப்பட்டன. (க-17)



# டிப்ளோமா சான்றிதழ் கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 16
டவர் நாடக அரங்கப்பாடசாலை மூலம் நடைபெற்றுவரும் தமிழ்மொழி மூலமான இரண்டு வருட முழுநேர நாடகமும், அரங்கக் கலைகளுக்குமான உயர் டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்த 49 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். திருவள்ளுவர் பண்பாட்டு மத்திய நிலையத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் மற்றும் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட டவர் நாடகப் பாடசாலை ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், நாடக பாடநெறி விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்துகொள்வர். (க)






# மேசைப்பந்தாட்டப் போட்டியில் யூனியன் கல்லூரிக்கு சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 15
வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட மேசைப்பந்தாட்டத்தில், 20 வயதின் கீழ் ஆண்களுக்கான போட்டியில், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி முதலிடம் பெற்று, மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.
அத்துடன் பாடசாலையின் 16 வயதின் கீழ் பெண்கள் அணி, வலயமட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியில், மூன்றாமிடம் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (க-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்த...

எந்த முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மாகாணசபைத் தேர்தலை நடத்தும் முறைமை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு இந்த வாரம் கூடவுள்ளது. இந்தக் குழுவின் தலைவராக விஜித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.
பொருளாதார இலக்குகளை நோக்கி செல்லும்போது அநாவசியமான அழுத்தங்களை தவிர்க்கும் வகையிலேயே மாகாணசபை தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
அதேவேளை, பழையமுறைமையின்கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு சிறியதொரு சட்டத்திருத்தமே தேவைப்படுகின்றது என எதிரணிகள் சுட்டிக்காட்டியுள்ளன. தேர்தலை இழுத்தடிக்கும் நோக்கிலேயே எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆளுந்தரப்பு பேசுகின்றது என்றும் அந்தக் கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. (அ-எ-44)

## நெருக்கடிகளைத்...

களை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 117.04 மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியனவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள சில நிர்வாகச் சிக்கல்கள் வெகுவிரைவில் தீர்க்கப்படும்.
யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தீவுப் பகுதிகளிலிருந்து மக்கள் பெருமளவில் வெளியேறியுள்ளமையால் அந்தப் பிரதேசங்கள் சோபையிழந்து காணப்படுகின்றன. நாம் தற்போது உட்கட்டமைப்பு அபிவிருத்திகளைச் செய்வதால் அந்தப் பகுதி மக்கள் மீண்டும் தமது சொந்தப் பிரதேசங்களில் வந்து குடியமரலாம்.
உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் காரணமாக சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் எரிபொருள் நெருக்கடி ஏற்படலாம் என்பதைக் கருத்தில்கொண்டே 'கியூ.ஆர்' முறைமை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் போர்ப் பதற்றம் இன்னும் இரண்டு மாதங்களுக்கு மேல் தொடருமாக இருந்தால், அது உள்நாட்டில் நாம் முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்-என்றார். (அ-எ-26)

## திடீர்..

முண்டியடித்தனர். அதனால் ஆங்காங்கே வரிசைகளும் தோன்றியிருந்தன.
நேற்று மதியம் தொழில்நுட்பப் பிரச்சினைகள் நீக்கப்பட்டு கியூ. ஆர். முறைமை நடைமுறைக்கு வந்தபோதும் மக்கள் மத்தியில் குழப்பங்கள் நீடித்ததைக் காண முடிந்தது. உடனடியாகக் கியூ. ஆர். குறியீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் திண்டாடியதையும் அவதானிக்க முடிந்தது. திடீரென அறிவிப்பு விடுக்காமல் போதுமான கால அவகாசம் வழங்கி, கியூ. ஆர். குறியீடுகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் இதை நடைமுறைப்படுத்தியிருக்கலாம் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (அ-எ-17)

## எரிபொருள்...

சிக்கல்களால் நேற்று மதியம் 12 மணி முதல் இந்த முறைமை நடைமுறைக்கு வரும் என்று பின்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்பச் சிக்கல்கள் நீக்கப்பட்டு நேற்று பிற்பகல் ஒரு மணியவில் கியூ. ஆர். முறைமை நடைமுறைக்கு வந்தது.
எரிபொருள் ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கியூ. ஆர். குறியீடு நடைமுறை தற்போது முழுமையாக மீளமைக்கப்பட்டு, இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என்று டிஜிட்டல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
https://fuelpass.gov.lk/ என்ற இணையத்தளத்தினூடாக தமக்குரிய கியூ. ஆர். குறியீட்டைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என அந்த அமைச்சு அறிவித்துள்ளது.
ஏற்கனவே கியூ. ஆர். குறியீடு வைத்திருப்பவர்கள் மற்றும் வாகன உரிமையிலோ அல்லது பதிவு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கத்திலோ எவ்வித மாற்றமும் இல்லாதவர்கள், தங்களின் பழைய கியூ. ஆர். குறியீட்டையே தொடர்ந்து பயன்படுத்தி தடையின்றி எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
முன்னர் பதிவு செய்து, ஆனால் தற்போது கியூ. ஆர். குறியீட்டைத் தொலைத்தவர்கள் அல்லது தொலைபேசியிலிருந்து நீக்கியவர்கள் தகவல்கள் மாறாத பட்சத்தில் மீண்டும் பதிவு செய்யத் தேவையில்லை. கணினியில் உள்நுழைந்து, தொலைபேசிக்கு வரும் கடவுச்சொல் மூலம் பழைய கியூ. ஆர். குறியீட்டை மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்.
இதுவரை பதிவு செய்யாதவர்கள், புதிதாக வாகனம் வாங்கியவர்கள் (உரிமை மாற்றம்) அல்லது முன்னர் பதிவு செய்த தொலைபேசி இலக்கத்தைத் தற்போது பயன்படுத்தாதவர்கள் ஆகியோர் கணினியில் புதிதாகப் பதிவு செய்தல் அவசியமாகும்.
எரிபொருள் நிலையங்களில் நெரிசலைக் குறைக்கவும், வினைத்திறனான சேவையை உறுதிப்படுத்தவும் இந்த அறிவுறுத்தல்களை முறையாகப் பின்பற்ற வேண்டும் என்று வாகன உரிமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலதிக விவரங்கள் அல்லது இது தொடர்பான சிக்கல்களுக்கு, அரச தகவல் மையத்தின் 1919 என்ற விசேட இலக்கத்தைத் தொடர்புகொள்ளமுடியும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (அ-எ-இ)

## பொலிஸ்...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
அடுத்த மாதம் இறுதி வரை எரிபொருள் விநியோகத்தில் எந்தச் சிக்கலும் இருக்காது. இன்று (நேற்று) கியூ. ஆர். முறைமை நடைமுறைக்கு வந்தபோது இணையத்தளங்களில் சில தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டிருக்கலாம். அதனால் மக்கள் வரிசைகளில் நின்று எரிபொருளைப் பெற்றனர். ஆனால் தற்போது அந்தத் தொழில்நுட்பப் பிரச்சினைகள் அனைத்தும் சரி செய்யப்பட்டுள்ளன.
மக்கள் இனி வரிசைகளில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. சாதாரண நுகர்வோருக்குத் தேவையான எரிபொருள் அளவு தீர்மானிக்கப்படும். அவை எரிபொருள் நிலையங்களில் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன. வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், அதனை எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.
அதை உறுதிப்படுத்தப் பொலிஸார் தலையிடுவதுடன் தேவையற்ற முறையில் வரிசைகளில் நிற்பவர்களுக்கு இனி எரிபொருள் வழங்கப்பட மாட்டாது. எரிபொருள் நிலையங்களுக்கு நாம் வழங்கிய எரிபொருள் அளவுக்கும், கியூ. ஆர். ஊடாக விநியோகிக்கப்பட்ட அளவுக்கும் இடையே ஏதேனும் வித்தியாசம் காணப்பட்டால், சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களது அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்படவும் வாய்ப்புள்ளது.
பயணிகள் போக்குவரத்து பஸ்களுக்கு வழமை போன்று இலங்கை போக்குவரத்துச் சபை ஊடாக எரிபொருள் வழங்கப்படும். அவர்களின் பயணத் தூரம் மற்றும் தினசரித் தேவைக்கேற்ப எரிபொருள் அளவு கணக்கிடப்பட்டு, அதற்கேற்ப கியூ. ஆர். குறியீட்டு ஒதுக்கீடு மாற்றியமைக்கப்படும். மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான எரிபொருளையும் முறையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ-எ-17)

## காக்கைதீவு...

பகுதியில் மனித மலக் கழிவுகளும் கொண்டுவரப்பட்டு வீசப்படுகின்றன. அதனால் பெரும் துர்நாற்றம் ஏற்படுகின்றது. பெரும் சுகாதாரக் கேடாகவும் இருக்கின்றது 'என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (அ-எ-27)

## பங்குனித்...

மெண்ணிக்கையான பக்தர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆலயச்சூழலில் சுகாதார நடவடிக்கைகள், குடிநீர் வசதிகள், போக்கு வரத்து வசதிகள், வாகன தரிப்பிடவசதிகள், பாதுகாப்புநடவடிக்கைகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இலங்கைப்போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் சாலை, பருத்தித்துறை சாலை பஸ்கள் கனகன்புளியடிச் சந்தி மற்றும் நுணாவில் சந்தி வழியாக ஆலயம் வரை சேவையில் ஈடுபடவுள்ளன. சுன்னாகம் சாவகச்சேரி பருத்தித்துறை சாவகச்சேரி ஆகிய சேவைகளும் நடைபெறவுள்ளதுடன், தனியார் பஸ் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
சாவகச்சேரி பிரதேச சபை சுகாதார மற்றும் குடிநீர்வசதிகள் உட்பட வீதிகளுக்கு நீர் விசுறுதல் போன்றவற்றை மேற்கொள்ளவுள்ளனர். சாவகச்சேரி பொலிஸார் ஆலயசூழலில் பாதுகாப்பு நடவடிக்கைகளையும், சட்டம் ஒழுங்கு, கண்காணிப்புக்களையும், நடைமுறைப்படுத்தவுள்ளனர்.
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரிபணிமனை, தென்மராட்சி பிரதேச செயலகம், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம் முதலுதவிச் சங்கம், பாடசாலைகளினது சாரணிய மாணவர்கள், மட்டுவில் இந்து இளைஞர் சங்க தொண்டர்கள் என பல்வேறு அமைப்புக்களும் ஆலய சூழலில் பணியில் பங்கேற்கவுள்ளனர்.
பொங்கல் உற்சவம், அதிகாலை 5 மணிக்கு உஸத்காலப்பூசையுடன் ஆரம்பமாகி விசேடபூசை, அபிசேகம், என்பன காலை மாலை இடம்பெற்று, இரவு 9 மணிக்கு அர்த்தசாமப்பூசையுடன் நிறைவுபெறும். பக்தர்கள் வழமை போன்று, தங்கள், நேர்த்திக்கடன் வழிபாடுகள், பொங்கல், படையல், அர்ச்சனை, என்பவற்றை அதிகாலை 5 மணி முதல் இரவு 9 மணிவரை மேற்கொள்ளமுடியும்.
அதேவேளை, பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்மன் ஆலய மகாகும்பாபிசேகப் பெருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரையான சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.
எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காலை 9 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை நடைபெறவுள்ளதுடன், மறுநாள் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை9 மணி தொடக்கம் பிற்பகல் 03 மணி வரை நடைபெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (அ-எ-131)

## இலங்கை...

தவணை நிதியை விடுவிப்பது தொடர்பான உடன்படிக்கைகள் எட்டப்படும் என்று கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியம் இதுவரை ஐந்து தவணை நிதியை இலங்கைக்கு விடுவித்துள்ளது. (அ.எஇ)

## மீண்டும்...

லில் அத்தியாவசியச் சேவைகளை முறையாகப் பேணுவதில் எழுந்துள்ள சவால்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது. அதிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் நோக்கில், அரச ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.
சுகாதார சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், அதற்காக அத்தியாவசிய எரிபொருள் கையிருப்புகளைப் பிரதேச ரீதியாகப் பேணுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆராயவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் கல்வி உள்ளிட்ட ஏனைய துறைகளை எவ்வாறு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது என்பதும் ஆராயப்பட்டதுடன், விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் துறைகளுக்கான எரிபொருள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக டிஜிட்டல் குறியீட்டு (QR) முறையை விரைவாக முறைப்படுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-எ-இ)

## வாள்...

மற்றையவரிடம் இருந்து 2 கிராம் 220 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது. (அ-எ-27)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருசாமி வித்தியாலய விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 16
கைதடி குருசாமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் ச.அகிலன் தலைமையில் நடைபெறும் போட்டியில், பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சுந்தரலிங்கம், சிறப்பு விருந்தினராக பாடசாலை நலன் விரும்பி சி.செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)



முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி பாடசாலை முதல்வர் சு.பகீரதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ச-55)



மன்னார் - நறுவிலிக்குளம் அ.த.க. பாடசாலையின் 2026ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார். (ச-246)



பருத்தித்துறை கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக இளைஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பருத்தித்துறை நகரசபை தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போலால், அவரது சொந்த நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கரப்பந்தாட்டப் பந்துகள் மற்றும் மின்விளக்குக் கையளிக்கப்பட்டன. (க-100)


## பேக்கரி வேலைக்கு ஆட்கள் தேவை

**பாண், பணிஸ், கேக் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு ஆண், பெண் தேவை.**

* வயது எல்லை : 20 தொடக்கம் 40 வயது வரை
* வெளி மாவட்டத்தவர்களுக்கு தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்படும்.

**தொடர்பு: 077 325 3606**

(CS 31450) A


# மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 06 . 1944



இறப்பு 14 . 03 . 2026

## நவரத்தினம் பாக்கியராசா
(ஓய்வுநிலை ஆசிரியர்)

காரைநகர், புதுறோட் மல்லிகையைப் பிறப்பிடமாகவும் 859/6, K.K.S வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் பாக்கியராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (14.03.2026) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தனபாக்கியம் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ரேவதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகபூசணியின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்புக் கணவரும், கோபிராஜ் (அமெரிக்கா), பத்மஜா (லண்டன்), கோபிரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அச்சுதா (அமெரிக்கா), சம்பந்தன் (லண்டன்), கிருஷாந்தி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், பதுமன், இலக்கணா, மகரிஷி, ஆதீரன், காலஞ்சென்ற மகிழன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிறிகரலட்சுமி, தர்மராஜா (M.G.R), சாரதா, லலிதா (அன்னம்) மற்றும் கோகனதை (சுவிஸ்), நிர்மலாதேவி, அரிகரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் சுந்தராம்பாள், கனகசுந்தரம், நடராசா (சுவிஸ்), பாலசுப்பிரமணியம், சிவமலர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், பாலிதராஜா (சுவிஸ்) மற்றும் சந்தானலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2026) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் காரைநகர் சாம்பலோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 9967 140**

859/6, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

(cs.60990) (N-1)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.